17th December 1956]

Sri S. RAMALINGAM : சின்னாளப்பட்டியில் விசைத்தறி புகுத்துவது பற்றி தொழிலாளர்கள் செய்த கிளர்ச்சி வெற்றி பெற்று விட்டதாக சர்க்கார் அபிப்பிராயப்படுகிறார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தொழிலாளர்கள் அவ்வளவு சுலபமாக வெற்றிபெருவதில்லை என்பதுதான் நான் இது வரையில் கவனித்தது.

Sri V. BALAKRISHNAN : எந்தத் தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்தார்கள், எந்த முறையில் கிளர்ச்சி நடந்தது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சின்னாளப்பட்டியைப்பற்றி ரொம்ப கவனமாக கனம் அங்கத்தினர் கேள்வி கேட்டதால் அவர்களுக்கே இது தெரிந்திருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

Sri P. RAMAMURTHI : சின்னாளப்பட்டியில் விசைத்தறி புகுத்தியதின் விளைவாக யாருக்கும் வேலை பாதிக்கப்படவில்லை என்று கனம் மந்திரி அவர்கள் கூறினார். அதே சமயத்தில் விசைத்தறி ஓடுகிறதா, இல்லையா என்பதுகூட அரசாங்கத்துக்கு தெரியாது என்று கூறினார். ஒரு விஷயம் தெரியாமலேயே அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன என்பதைப் பற்றி சொல்லக்கூடிய திறமை மந்திரி அவர்களுக்கு எப்படி ஏற்பட்டது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : என்னைப் பொறுத்த மட்டில் விசைத்தறியைப்பற்றி நான் அவ்வளவு கவலை கொள்ளவில்லை. யாராவது ஒரு கைத்தறியாளரின் வேலை பாதிக்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பற்றிதான் நான் கவலை கொள்வது (ஆரவாரம்). அதுபற்றி நான் பேசிவந்திருக்கிறேன். சின்னாளப்பட்டியில் நிலைமையை நேரில் நன்றாகத் தெரிந்துகொண்டுதான் அங்கே இது வரையில் ஒரு கைத்தறியாளரும் பாதிக்கப்படவில்லை என்று சொன்னேன்.

Distribution of cement in the State

* 350 *Q*.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the average monthly production of cement in the State;

(*b*) the quantity of imported cement allotted for this State; and

(*c*) the quantity allotted for public use and for Government's requirements?

The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : (*a*) 57,852 tons.

(*b*) ' Nil ' till 30th June 1956. But with effect from 1st July 1956 the indigenous cement produced in the country is taken over by the State Trading Corporation of India (Private), Limited, set up by the Government of India. It imports foreign cement also from abroad and allots both indigenous and imported cement as one commodity at an equalised price fixed by it.

(*c*) Public 21,683 tons per month.

Government 11,164 tons per month.

[17th December 1956

SRI V. BALAKRISHNAN : நாட்டிலே சிமெண்டு பற்றாக்குறை இருந்துவருகிறது. புதுக்கோட்டை போன்ற இடங்களில் சிமெண்டு ஆலைக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைக்கின்றன என்பதை பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். அந்த மூலப்பொருள்களைக்கொண்டு அங்கு ஒரு சிமெண்டு ஆலை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : I understand that there is a proposal to start a new factory.

SRI M. PALANIYANDI : இப்பொழுது நமது மாகாணத்துக்கு அதிகமாக சிமெண்டு வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தையோ அல்லது கார்பரேஷனையோ கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறதா ? அதன் காரணமாக நமது மாகாணத்துக்கு அதிகமாக சிமெண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

அடுத்தபடியாக, தாசில்தார்களிடம் நியோகிக்கும் ஏஜெண்டுகள் தங்களுடைய கணக்குகளைக் கொடுக்கவேண்டுமென்று இருந்தபோதிலும்கூட அவர்கள் சரிவர கணக்குகளைக் கொடுக்காததன் காரணமாக மக்களுக்குத் தேவையான சிமெண்டு கிடைக்கக்கூடாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் ஏஜெண்டுகள் தங்கள் கணக்குகளை உடனடியாக தாசில்தார்களுக்கு சரிவர தெரிவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுப்பார்களா ?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : The entire control is exercised by the Industries, Labour and Co-operation Department of the Government. The question may be addressed to my Colleague the Minister for Industries.

SRI M. KALYANASUNDARAM : பொதுஜன உபயோகத்திற்காகவும் சர்க்கார் உபயோகத்திற்காகவும் நமது ராஜ்யத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் சிமெண்டு போதுமானது என்று சர்க்கார் கருதுகிறார்களா ? அப்படிப் போதாது என்றால் அதை அதிகப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : போதாது என்று முன்னமே மத்திய அரசாங்கத்திற்கு தெரிவித்திருக்கிறோம். அவர்கள் இன்னும் ஒன்றும் அதில் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. I.L.C. டிபார்ட்மெண்ட் மூலமாக நம் தேவையைப்பற்றி மறுபடியும் 'பிரஸ்' பண்ணச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

SRI V. K. RAMASWAMI MUDALIAR : Sir, is it a fact that some of the factories have doubled their production and, if so, may I know whether the position will ease?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : I have no figures on hand.

SRI A. M. RATHNASWAMY : In view of the paucity of the supply of cement and inasmuch as the Government require cement for their own projects, would the Government, Sir, devise suitable measures to find out an alternative material which would be as good and as efficient as cement?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : This is a matter for the research departments to go into. I am afraid the Government cannot do anything in this matter.

17th December 1956]

SRI S. PANCHAKSHARAM : Sir, it is apparent that the ordinary man is unable to get cement in the market at all. With considerable difficulty he is able to get a bag of cement at the rate of Rs. 10 or Rs. 12. I should like to know definitely whether supply is not in a position to keep pace with the demand or the scarcity is entirely man-made.

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : I have already stated that this subject is being administered by the Industries, Labour and Co-operation Department of this Government. The Additional Director for Industries and Commerce is the officer-in-charge of the thing. Representations in the matter may be made to my Colleague.

SRI V. C. PALANISAMI GOUNDER : நாட்டிலே எங்கு பார்த்தாலும் சிமெண்டு மேனியா பரவிவிட்டது. இதை அறிந்து மத்திய மந்திரி அவர்களே மக்கள் சுண்ணும்பை மறப்பதா என்று சொன்னது சர்க்காருக்கு தெரியுமா? ஆகையினுல், சுண்ணும்பை உபயோகப்படுத்துவதற்கு சர்க்கார் பிரசாரம் செய்வார்களா ?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : I understand that the Government are looking into that aspect of the question also.

SRI M. KALYANASUNDARAM : சிமெண்டு விநியோகத்தை சர்க்கார் ஸ்தாபனம் எடுத்துக்கொண்டுவிட்டதாகக் கூறப்பட்டும்கூட, விலை நிர்ணய கடமை ஒன்றைதான் அவர்கள் செய்கிருர்கள். விநியோகம் தனிப்பட்ட வியாபாரிகளின் மூலம்தான் பழைய முறைப்படி நடக்கிறது. ஆகையினுல் சிமெண்டு கள்ள மார்கட்டில்தான் கிடைக்கிறதே தவிர பகிரங்க மார்கட்டில் நியாய விலைக்குக் கிடைப்பதில்லை. இது விஷயமாக கள்ள மார்க்கட்டைத் தடுப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிருர்கள் ?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : இதுபற்றி முன்னமே எழுந்துள்ள ஒரு கேள்விக்கு பதில் அளித்துள்ளேன். இதுபற்றி அடிஷனல் டைரக்டரிடம் தகவல் கொடுத்திருக்கிறேன். அவரும் அதன் மீது வேண்டிய நடவடிக்கை எடுப்பார் என்று நிச்சயமாக கருதுகிறேன்.

SRI A. GOVINDASWAMI NAYAGAR : சிமெண்டு அத்யாவசியமான பொருளாக இருப்பதாலும், அது லாபகரமான தொழிலாக இருப்பதன் காரணத்தினுலும், சிமெண்டுத் தொழிலை தேசீயமாக்குவதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : It is a matter for the Central Government to consider, because I do not think we can straightway consider, with the present financial position of our Government, the question of nationalisation. For, the question of paying compensation, etc., is there. Hon. Members are aware of the budgetary position of our Government.

SRI V. BALAKRISHNAN : சிமெண்டுக்குப் பதிலாக சுண்ணும்பை உபயோகப்படுத்தினுல், வெற்றிலே போடுகிறவர்களுக்கு சுண்ணும்பு தட்டு ஏற்பட்டுவிடும் என்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா? (பலத்த சிரிப்பு.)

SRI K. VINAYAKAM : In spite of the rise in production of our cement, the demand for cement has been continuously growing. The problem is that supply cannot keep pace with demand. In this contingency, will the Government urge the Central Government to allot more quota to our State so that this scarcity may be got over?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : We have made representations to them and they also say that they are getting imported cement to make up the deficit that is prevailing in the country. In spite of all this, the demand outpaces the supply and hence the shortage.

SRI P. G. MANICKAM : பஞ்சாயத்து போர்டுகளுக்கு போதுமான சிமெண்டு கிடைக்கவில்லை என்று புகார் வந்திருக்கிறதா ? பஞ்சாயத்து போர்டுகளுக்கு போதுமான சிமெண்டு கொடுக்கும்படி சர்க்கார் உத்தர விடுவார்களா ?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : இப்பொழுது கேட்கப்படுகின்ற கேள்விகளெல்லாம் சிமெண்டு பற்றுக்குறை பற்றித்தான். ஆகையால் பஞ்சாயத்து போர்டுகளும் இதற்கு விலக்கு அல்ல.

SRI P. VENKATESHA SHOLAGAR : தாசில்தார்களிடமிருந்து பர்மிட்டுகள் அந்தந்த மாதத்தில் காலா காலத்தில் பொது மக்களுக்குக் கிடைப்பதில்லை. அடுத்த மாதத்தில்தான் சிமெண்டு எடுக்கப் போக வேண்டியதாயிருக்கிறது. அப்படி அடுத்த மாதம் போனால், சென்ற மாதக் 'கோட்டாவில்' எடுத்துப்போகவேண்டும். 'கோட்டா' தீர்ந்து போய்விட்டது என்று வியாபாரிகள் சொல்லிவிடுகிறார்கள். அதனால் பர்மிட் வைத்திருப்பவர்களுக்கு சிமெண்டு கிடைப்பதில்லை. அந்த சிமெண்டை வியாபாரிகள் கள்ள மார்கட்டில் விற்றுவிடுகிறார்கள். ஆகையால் பர்மிட் வைத்திருப்பவர்களுக்கு எந்த வகையிலும் வியாபாரிகள் சிமெண்டு கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : முன்னமே நான் இது பற்றி தகவல் கொடுத்திருக்கிறேன். டிபார்ட்மெண்ட் இது விஷயமாக நடவடிக்கை எடுக்கும் என்று எதிர் பார்க்கிறேன்.

SRI G. GOVINDAN : சிமெண்டு அவசியம் என்று உணர்ந்துதான் அங்கு கிடைக்கவில்லை, இங்கு கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ராமனாதபுரம், முதுகளத்தூர் தாலூகாக்களில் மூலப் பொருள்கள் கிடைக்கின்றன. அங்கு சிமெண்டு ஆலை ஏற்படுத்துவதற்கு லைசென்ஸ் வேண்டுமென்று கேட்கிறார்கள். அது விஷயமாக சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : இது மத்திய சர்க்காரைச் சேர்ந்த 'சப்ஜெக்ட்'.

Assignment of house-sites, etc., to Depressed Classes people

* 351 *Q.*—

11-20 a.m. DEPUTY SPEAKER : As the hon. Member Sri M. Jagannathan who put the question is not in his seat the question and answer will be printed in the proceedings.